[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 1

அறிவித்துள்ள இந்த விற்பனை வரிச் சலுகையின் காரணமாக மீன்பிடிக் கலன்களின் விலை கணிசமான அளவில் குறையும். சுனாமியால் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்துவிட்ட மக்களுக்கு மீன்பிடிக் கலன்கள் மிகக் குறைந்த விலையில் கிடைக்கச் செய்வது மிகவும் அவசியம் ஆகும். இதற்கு ஏதுவாக 2001 ஆம் ஆண்டில் குஜராத்தில் ஏற்பட்ட பூகம்ப நிகழ்வின்போது மைய அரசு வழங்கியவாறே தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் மைய அரசால் விதிக்கப்படும் சுங்க வரி, கலால் வரி மற்றும் சேவை வரி ஆகியவற்றிலிருந்து முழு விலக்கு அளிக்க வேண்டும் என்று இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே தமிழக அரசு மைய அரசுக்குக் கோரிக்கை விடுத்தது.

முற்பகல் 11—05

இந்த நிலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு அரசு தனது அதிகார வரம்புக்கு உட்பட்ட விற்பனை வரிச் சலுகை வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. மைய அரசும் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழக மக்களுக்கான மறுவாழ்வுப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் சுங்க வரி, கலால் வரி மற்றும் சேவை வரி ஆகியவற்றிலிருந்து முழு விலக்கு அளித்து விரைவில் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று மீண்டும் இந்த மாமன்றத்தின் வாயிலாக *(மேசையைத் தட்டும் ஒலி)* மைய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

3. கவன ஈர்ப்பு

ஈரோடு நகராட்சியுடன் சில பகுதிகளை இணைத்து மாநகராட்சியாக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55–ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. கே.எஸ். தென்னரசு அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கே.எஸ். தென்னரசு.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஈரோடு நகராட்சியை அருகில் உள்ள மூன்றாம் நிலை நகராட்சிகள்

2005 ஏப்ரல் 1] [திரு. கே.எஸ். தென்னரசு]

மற்றும் ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சியாக ஆக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

ஈரோடு நகராட்சியுடன் காசிபாளையம், வீரப்பன்சத்திரம், சூரம்பட்டி, பெரியசேமூர் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிகளையும், B.P. அக்ரஹாரம், சூரியம்பாளையம், கங்காபுரம், வில்லரசம்பட்டி, எல்லப்பாளையம், முத்தம்பாளையம் மற்றும் திண்டல் ஊராட்சிப் பகுதிகளை இணைத்து ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக்கக் கோரும் கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். தென்னரசு.

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது என்று கூறியிருக்கின்றார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பேரூராட்சிகளை எல்லாம் ஊராட்சிகளாகவும், சிறப்பு நிலை ஊராட்சிகளாகவும் அறிவித்து, தமிழக மக்களின் வாழ்வை சிறக்கச் செய்தது மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள்தான். தமிழகத்திலுள்ள 6 மாநகராட்சிகளில், சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய 3 மாநகராட்சிகளை 1–6–1994 ஆம் ஆண்டு உருவாக்கிய பெருமை தனிப் பெரும் கருணையாய் அருட்பெருஞ் ஜோதியாய் விளங்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களையே சாரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே 5 நகராட்சிகளைக் கொண்ட ஒரு தொகுதி ஈரோடு தொகுதிதான் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஈரோடு நகராட்சி, காசிபாளையம் நகராட்சி, வீரப்பன்சத்திரம் நகராட்சி, சூரம்பட்டி நகராட்சி, பெரிய சேமூர் நகராட்சி ஆகிய 5 நகராட்சிகளோடும் அருகில் இருக்கின்ற B.P. அக்ரஹாரம் ஊராட்சி, சூரியம்பாளையம் ஊராட்சி, கங்காபுரம் ஊராட்சி, எல்லப்பாளையம் ஊராட்சி, வில்லரசம்பட்டி

ஊராட்சி, முத்தம்பாளையம் ஊராட்சி, திண்டல் ஊராட்சி ஆகிய 7 ஊராட்சிகளையும் சேர்த்தால் மொத்தப் பரப்பளவு 110 சதுர கிலோ மீட்டர் வருகிறது. மொத்த மக்கள்தொகை 2001 ஆம் ஆண்டு கணக்கின்படி 4 இலட்சத்து 10 ஆயிரம் வருகிறது. 2004 ஆம் ஆண்டுக் கணக்கின்படி மொத்த வருவாய் 38 கோடியே 90 இலட்சம் ரூபாய் வருகிறது. நகராட்சிகளில் மட்டும்தான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தென்னரசு, ஏதாவது ஒரு கேள்வி கேளுங்கள். என்ன கேட்க வேண்டுமோ, அந்தக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. கே.எஸ். தென்னரசு: நகராட்சிகளில் மட்டும்தான் காலி மனை நிலங்களுக்கு வரி வசூல் செய்யப்படுகிறது. ஊராட்சிகளில் அங்கீகரிக்கப்படாத காலி மனை நிலங்களுக்கு வரிவசூல் செய்யப்படுவதில்லை. மாநகராட்சியாக ஆகும் பட்சத்தில் வருவாய் அதிகரிக்கும், ரூபாய் 50 கோடியாகவும், 2001 ஆம் ஆண்டு கணக்கின்படி 4 இலட்சத்து 10 ஆயிரம் என்று உள்ள மக்கள்தொகை 2005–2006–ல் 5 இலட்சம் ஆகவும் உயரும். ஆக, மாநகராட்சி ஆவதற்கு அனைத்துத் தகுதிகளும் உள்ளதால், மாநகராட்சியாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈரோடு நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுள்ளார். இரண்டாவது மாநில நிதிக் கமிஷன் அறிக்கையில், ஒரு நகராட்சியினை மாநகராட்சியாக மாற்ற ஆண்டு வருமானம் ரூ.50 கோடிக்கு அதிகமாகவும், மக்கள்தொகை குறைந்தபட்சம் 5 இலட்சமாகவும் இருக்க வேண்டுமெனக் குறியீடு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஈரோடு நகராட்சி மற்றும் அவர் கூறியுள்ள மூன்றாம் நிலை நகராட்சி மற்றும் அருகில் உள்ள ஊராட்சிகள் அனைத்தையும் சேர்த்தாலும்கூட, அங்கே அந்த வருமானமானது ரூ.38 கோடியே 45 இலட்சம் மட்டும்தான் இருக்கின்றது. மொத்த மக்கள்தொகையும் 4.05 இலட்சமாக உள்ளதால், ஈரோடு நகராட்சியினை மாநகராட்சியாக மாற்ற வழிவகையில்லை. மேலும், தற்போது நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற எல்லைகள் வரையறுக்கும் பணியின் காரணமாக, உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மாற்றத் தடையாணை இருப்பதால், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகளை இணைத்து, ஈரோடு

2005 ஏப்ரல் 1] [திரு. கே.பி. அன்பழகன்]

நகராட்சியினை மாநகராட்சியாக நிலையுயர்த்த தற்போது சாத்தியமில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தென்னரசு, என்ன?

திரு. கே.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் பிறந்த மண், பேரறிஞர் அண்ணா வளர்ந்த மண் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, திரு. தென்னரசு, எல்லாம் தெரியும். இப்போது தடையாணை இருக்கிறது, அதனாலே முடியாது என்கிறார்.

4. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு

(ஆ) கோரிக்கை எண் 8 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – பால் வளம்

(இ) கோரிக்கை எண் 7 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம்

– – –

(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005–2006 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்